தியாகராஜன், போக்குவரத்துக்கழக உயர் அலுவலர்கள்.

தினமணி ஏ. 08.07.2021

# சிறப்பு ஒலிம்பிக் மருத்துவர் குழுத் தலைவராக தேர்வு

**தாம்பரம், ஜூலை 7:** சென்னை குரோம்பேட்டை மாற்றுத்திறன் மேம்பாடு மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் ஆர்.கார்த்திகேயன் ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் குளிர்கால உலக மாற்றுத்திறனாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் இளைஞர்களுக்கான மருத்துவக் குழுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த தகவலை இந்திய சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டு தேசிய இயக்குநர் முக்தா நாராயண் திண்ட் தெரிவித்துள்ளார்.

குரோம்பேட்டை ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாற்றுத்திறன் மேம்பாடு மருத்துவத்துறைத் தலைவராக பணியாற்றி வரும் டாக்டர் ஆர்.கார்த்திகேயனை கல்லூரி முதல்வர் ஜான்சன் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். இது குறித்து டாக்டர் ஆர்.கார்த்திகேயன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச குளிர்கால பனிச்சறுக்கு உள்ளிட்ட ஸ்கேட்டிங் விளையாட்டுகள் ரஷ்யாவில் ஜனவரி 22 முதல் 28 வரை நடைபெற உள்ளது. இதில் 49 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர். அவர்களுக்கான மருத்துவர் குழுத் தலைவராக செல்கிறேன் என்றார்.

விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு மருத்துவ துறையில் மிகுந்த அனுபவம் மிக்க டாக்டர் கார்த்திகேயன், சென்னை முட்டுக்காடு பன்திறன் குறைபாடுடையோர் மேம்பாடு மையத்தில் பகுதி நேர சிகிச்சை மற்றும் பயிற்சி மருத்துவராகப் பணியாற்றி வருகிறார்.